# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண்.8/2016 நாள் 09.08.2016

**உள்ளாட்சி தேர்தல்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம் தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஆணை வெளியிட்டுள்ளது.**

தமிழ்நாட்டில் ஊரக / நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்த ஏதுவாக ஏற்கனவே தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் மாநில தேர்தல் அலுவலர்களாக கீழ்க்கண்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

1. ஊரக வளர்ச்சி இயக்குநர் (Director of Rural Development), சென்னை
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் (Director of Municipal Administration), சென்னை
3. பேரூராட்சிகளின் இயக்குநர் (Director of Town Panchayat), சென்னை

அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் (சென்னை நீங்கலாக) அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்களாகவும் சென்னை மாநகராட்சி பகுதிக்கு சென்னை மாநகராட்சி ஆணையர் மாவட்ட தேர்தல் அலுவலராகவும், நியமிக்கப்பட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் சட்ட பூர்வ ஆணை தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

பின்னர், கீழ்க்கண்ட அலுவலர்கள் வாக்காளர் பதிவு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி),
2. மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள் மற்றும்
3. பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்.

தற்போது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய சட்ட பூர்வ ஆணை எண்.7/2016 / தநாமாதேஆ/ஊதே–1 நாள் 08.08.2016ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 8 மற்றும் 10ன்கீழ் கீழ்க்கண்ட பதவிகளுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களை நியமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் அதிகார ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்
2. ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்
3. கிராம ஊராட்சி தலைவர்
4. கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்

மேலே குறிப்பிட்ட பதவியிடங்களுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் அலுவலர்கள் நியமனம் குறித்தான பணியின் தகுதி நிலை குறித்த விவரம் பின்வருமாறு :

| வ. எண். | தேர்தல் | தேர்தல் நடத்தும் அலுவலர் பணி தகுதி நிலை | உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பணி தகுதி நிலை |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | ஊரக வளர்ச்சித் துறை இணை இயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலைக்கு குறையாத அலுவலர் (5 முதல் 10 வரையிலான வார்டுகளுக்கு ஒரு அலுவலர் வீதம்) | ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் / வருவாய் கோட்ட அலுவலர் நிலைக்கு குறையாத அலுவலர் (ஒரு வார்டுக்கு ஒரு அலுவலர் வீதம்) |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் / வருவாய் கோட்ட அலுவலர் நிலைக்கு குறையாத அலுவலர் (ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து வார்டுகளுக்கும் ஒருவர் வீதம் அதாவது ஒரு ஊராட்சி ஒன்றியம் முழுமைக்கும்) | வட்டார வளர்ச்சி அலுவலர் (தொடர்புடைய ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) நீங்கலாக) / வட்டாட்சியர் நிலைக்கு குறையாத அலுவலர் (ஒவ்வொரு 5 அல்லது 6 வார்டுக்கு ஒருவர் வீதம்) |
| 3 | கிராம ஊராட்சி தலைவர் | தொடர்புடைய ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வட்டார ஊராட்சி) | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / துணை வட்டாட்சியர் (ஊராட்சி ஒன்றிய அளவில் தேர்தல் பிரிவுக்கு பொறுப்பாக்கப்பட்ட துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நீங்கலாக) (ஒவ்வொரு 5 அல்லது 6 கிராம ஊராட்சிகளுக்கு ஒருவர் வீதம்) |
| 4 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | | குறைந்தது 5 வருடம் உதவியாளர் பணி முடித்து பணியில் மூத்த உதவியாளர் என்ற நிலையில் உள்ள ஒரு அரசு அலுவலர் (ஒரு கிராம ஊராட்சிக்கு ஒருவர் வீதம்) |

மேலும், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்) விதிகளின் விதி எண்.9இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, சென்னை தவிர்த்து இதர மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு, அவரவர் தம் அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்டங்களில் பேரூராட்சி / மூன்றாம் நிலை நகராட்சியின் செயல் அலுவலர்களை முறையே பேரூராட்சி / மூன்றாம் நிலை நகராட்சியின் தேர்தல் நடத்தும் அலுவலர்களாகவும், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் ஆணையர்களை முறையே நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்களாகவும் அல்லது அரசின் எந்த ஒரு அலுவரையோ தேர்தல் நடத்தும் அலுவலராகவும், பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தேர்தல் நடத்தும் பொருட்டு மேற்கூறப்பட்ட விதிகளின் கீழ் நியமனம் செய்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

09/08/16
மக்கள் தொடர்பு அலுவலர்